# வேலூர் மாநகராட்சி

## வேலூர் மாநகராட்சி மைய அலுவலகத்தில் தனி அலுவலரின் மாமன்ற அவசரக் கூட்டம் நாள்: 14.08.2019 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைகள்.

## மாமன்ற கூட்டப்பொருள்

(1) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் நகரில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தி விடுபட்டுள்ள பகுதிகள் மற்றும் விரிவாக்கப் பகுதிகளுக்கு ஆய்வுகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்ய கலந்தலோசகர் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி மேம்பாட்டு கழகம் (TNUIFSL) மூலம் நியமிக்க வேண்டி கடிதம் பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் வேலூர் மாநகராட்சியில் தற்சமயம் பாதாள சாக்கடை திட்டம் பகுதி- I (Phase-I) 4 வார்டுகள் (28,29,32,34) முழுமையாகவும் 10 வார்டுகளில் (16,25,30,31,33,35,36,37,38,58) பகுதியாகவும் முடிக்கப்பட்டு பாதாள சாக்கடை திட்டம் நடைமுறையில் உள்ளது. மேலும் AMRUT – 2016-17 திட்டத்தின் கீழ் பகுதி- II ல் (Phase-II ) 17 வார்டுகள் (17,18,19,20,21,22,23,24,26,27,54,55,56,57,58,59,60) முழுமையாகவும் 15 வார்டுகள் (16,25,30,31,33,35,36,37,38,39,40,41,51,52,53) பகுதியாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டது. மேலும் AMRUT – 2016-17 திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக பகுதி- III ல் (Phase-III ) 13 வார்டுகள் (6,7,8,9,10,11,12,13,14,15,42,43,44) முழுமையாகவும் 13 வார்டுகளில் (4,33,37,39,40,41,45,46,49,50,51,52,53) பகுதியாகவும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட வார்டுகள் போக மீதமுள்ள விடுப்பட்ட பகுதி மற்றும் விரிவாக்கப்பகுதிகளில் உள்ள 4 வார்டுள் (45,46,49,50) பகுதியாகவும், 6 வார்டுகள் (1,2,3,5,47,48) முழுமையாகவும் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி மேம்பாட்டு கழகம் (TNUIFSL) PDGF மூலம் மாநகராட்சி சார்பில் கல்நதாலோகர் நியமித்து ஆய்வுகள் மேற்கொள்ள அங்கீகரித்து விரிவான திட்ட அறிக்கை ((DPR) தயாரித்து கொடுக்க அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு: -**

1. இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. விடுப்பட்ட பகுதி மற்றும் விரிவாக்கப்பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செய்லபடுத்த தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி மேம்பாட்டு கழகம் (TNUIFSL) PDGF மூலம் மாநகராட்சி சார்பில் கலந்தாலோசகர் நியமித்து ஆய்வுகள் மேற்கொள்ள அங்கீகரித்து விரிவான திட்ட அறிக்கை ((DPR) தயாரித்து கொடுக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.**4537/2019/இ1)

**தீர்மானம் எண்: 789 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்)S.சிவசுப்பிரமணியன்
ஆணையாளர் (ம)தனி அலுவலர்,
வேலூர் மாநகராட்சி.

# வேலூர் மாநகராட்சி

## வேலூர் மாநகராட்சி மைய அலுவலகத்தில் தனி அலுவலரின் மாமன்ற சாதாரணக் கூட்டம் நாள்: 30.08.2019 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைகள்.

## மாமன்ற கூட்டப்பொருள்

(1) வேலூர் மாநகராட்சி ஆணையர் அவர்களின் ஜுன் மற்றும் ஜுலை-2019 மாத நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** -பதிவு செய்யலாம்.

(ந.க.எண்:சி1/14864/2017)

**தீர்மானம் எண்: 790 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(2) வேலூர் மாநகராட்சி மாநகர் நல அலுவலர் அவர்களின் ஏப்ரல் முதல் ஜுலை-2019வரை மாத நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** -பதிவு செய்யலாம்.

(ந.க.எண்:எச்1/9473/2013)

**தீர்மானம் எண்: 791 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(3) வேலூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம்-3 பகுதிகளாக செயல்படுத்த திட்டமிடப்பட்டு அதில் முதல் கட்டமாக பகுதி – 1-ன் கீழ் TNUDP – III திட்டத்தின் கீழ் வேலூர் மாநகராட்சி 60 வார்டுகளில் 14 வார்டுகளில் [வார்டு எண்கள் 16 (பகுதி) 25,28,29, 30(பகுதி), 31(பகுதி) 32,33,34,35,36,37,38 மற்றும் 58(பகுதி) ] பாதாள சாக்கடை திட்டம் பணிகள் செயல்படுத்தப்பட்டது.

அரசு ஆனை எண்: (D) 555 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 30.12.2009-ல் பகுதி-I-க்கு ரூ.40.49 கோடியில் செயல்படுத்த கிழ்கண்டவாறு அரசு ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளுது.

| | | |
|---|---|---|
| மான்யம் (TNUDP - III) | - | 18.87 கோடி |
| கடன் (TNUDP - III) | - | 11.47 கோடி |
| பொதுமக்களின் பங்களிப்பு | - | 8.94 கோடி |
| வட்டி | - | 1.21 கோடி |
| **மொத்தம்** | - | **40.49 கோடி** |

மேற்படி அரசு ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு பொது மக்களின் பங்களிப்புத் தொகை ரூ.8.94 கோடி வசூல் செய்ய வழிவகை செய்யப்பட்டதின் அடிப்படையில் பாதாள சாக்கடை திட்டத்தில் குடியிப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு கழிவுநீர் இணைப்பு வழங்க உரிய துணை விதிகள் (Bye Laws) இயற்றப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களிடம் அங்கிகாரம் பெறப்பட்டு பின்னர் வேலூர் மாநகராட்சி மாவட்ட அரசிதழில் 05.06.2011-அன்று வெளியிடப்பட்டு அதன் அடிப்படையில் தற்போது கிழ்க்கண்டவாறு பயனாளிகளிடம் இருந்து வைப்புத்தொகை (Deposit) மற்றும் சேவைக் கட்டணம் (Service Charge) பெறப்பட்டு பாதாளச் சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

துணை விதி எண் 38 உட்பரிவு (8) அ (1) மற்றும் (2)

| குடியிருப்பு | முன்வைப்பு த் தொகை ரூ. | பிரதி மாத சேவைக் கட்டணம் ரூ. | வணிக நிறுவனம் (ம) தொழிற்சாலை | முன்வைப்புத் தொகை ரூ. | பிரதி மாத சேவைக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 500 சதுர அடிக்கு குறைவாக பரப்பளவு உள்ள கட்டிடம் | 5000.00 | 80.00 | 500 சதுர அடிக்கு குறைவாக பரப்பளவு உள்ள கட்டிடம் | 8000.00 | 150.00 |
| 501முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 6000.00 | 90.00 | 501முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 10000.00 | 200.00 |
| 1201முதல் 2400 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 8000.00 | 100.00 | 1201முதல் 2400 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 12000.00 | 225.00 |
| 2401 சதுர அடி பரப்பளவிற்கு மேல் உள்ள கட்டிடம் | 10000.00 | 120.00 | 2401முதல் சதுர அடி பரப்பளவிற்கு மேல் உள்ள கட்டிடம் | 15000.00 | 300.00 |
| **சிறப்பினம்** | **10000.00** | **120.00** | **சிறப்பினம்** | **100000.00** | **1000.00** |

மேலும் தற்போது வேலூர் மாநகராட்சி AMRUT – 2016-17 திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக பகுதி–II-ல் அலமேலுமங்காபுரம், சத்துவச்சாரி, சேண்பாக்கம், கொணவட்டம், கஸ்பா மற்றும் வேலப்பாடி பகுதிகளில் உள்ள 26 வார்டுகளில் (வார்டு எண்கள் 16 முதல் 20 வரை, 21,22,23,24,25,27,29,33,39,40,41,51,52,53,54,55,56,57, 58,59 & 60) பாதாள சாக்கடைத் திட்டம் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| AMRUT திட்டம் மத்திய அரசின் பங்களிப்பு | - | 171.85 கோடி |
| AMRUT திட்டம் மாநில அரசின் பங்களிப்பு | - | 68.74 கோடி |
| பொது மக்களின் பங்களிப்பு | - | 103.10 கோடி |
| **மொத்தம்** | - | **343.69 கோடி** |

மற்றும் மூன்றாம் கட்டமாக AMRUT -2016-17 திட்டத்தின் கீழ் பகுதி-III-ல் விருதம்பட்டு, கழிஞ்சூர், காந்தி நகர் (கிழக்கு மற்றும் மேற்கு) காங்கேயநல்லூர், பழைய காட்பாடி, விருபாட்சிபுரம், தொரப்பாடி, இடையன்சாத்து மற்றும் ஓட்டேரி பகுதிகளில் உள்ள 26 வார்டுகளில் (வார்டு எண்கள் 4,6 முதல் 15 வரை 33,37,39 முதல் 46 வரை மற்றும் 49 முதல் 53 வரை உள்ள வார்டுகள்) பாதாளச் சாக்கடைத் திட்டம் மேற்கொள்ள கீழ்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| AMRUT திட்டம் மத்திய அரசின் பங்களிப்பு | - | 124.13 கோடி |
| AMRUT திட்டம் மாநில அரசின் பங்களிப்பு | - | 46.65 கோடி |
| ஆசிய வளர்ச்சி வங்கி கடன் | - | 90.61 கோடி |
| மாநகராட்சி பங்களிப்பு | - | 29.38 கோடி |
| **மொத்தம்** | - | **293.77 கோடி** |

எனவே பாதாள சாக்கடை திட்டம் பகுதி– I, பகுதி– II மற்றும் பகுதி-III-ன் கீழ் பொதுமக்களின் பங்களிப்பு ரூ.141.42 கோடி ரூபாய் வசூலிக்கப்பட வேண்டும் மேலும் மாமன்ற தீர்மானம் எண்:188, நாள்:04.05.2017-ல் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட வைப்புத்தொகை மற்றும் சேவை கட்டணங்கள் கடன் மற்றும் வட்டி தொகை திரும்ப செலுத்த போதுமானதாக இல்லை என்பதால் ஏற்கனவே உள்ள வைப்புத்தொகை குறைவாக உள்ளதால் மேற்கொண்டு மேற்படி திட்டத்தினை பராமரிப்பு செய்ய ஆகும் செலவினங்கள் ஆண்டிற்கு ரூ.11.25 கோடியாகும் என்பாதலும் நடைமுறையில் உள்ள வேலூர் மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 432 (7எப்) துணை விதிகளில் உள்ள உபவிதி எண் 38 (உட்பிரிவு 8ல் அ (1) மற்றும் (2)ல்) 2401 சதுர அடிக்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு வைப்புத்தொகை மற்றும் சேவைக் கட்டணம் ஒரே அளவில் உள்ளதை மாற்றி அமைக்க வேண்டியுள்ளதாலும் பாதாள சாக்கடை திட்டத்தில் இணைப்பு பெறும் குடியிருப்புகள் மற்றும் குடியிருப்பு அல்லாத வணிக நிறுவனங்களுக்கு வைப்புத் தொகை (Deposit) மற்றும் சேவைக்கட்டணங்கள் (Service Charges) கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கலாம்.

திருத்தப்பட வேண்டிய உபவிதி எண் 38 உட்பிரிவு 8ல் அ(1) மற்றும் (2)

| குடியிருப்பு | முன்வைப்புத் தொகை ரூ. | பிரதி மாத சேவைக் கட்டணம் ரூ. | வணிக நிறுவனம் (ம) தொழிற்சாலை | முன்வைப்புத் தொகை ரூ. | பிரதி மாத சேவைக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 500 சதுர அடிக்கு குறைவாக பரப்பளவு உள்ள கட்டிடம் | 8000.00 | 160.00 | 500 சதுர அடிக்கு குறைவாக பரப்பளவு உள்ள கட்டிடம் | 15000.00 | 300.00 |
| 501 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 10000.00 | 180.00 | 501முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 20000.00 | 420.00 |
| 1201முதல் 2400 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 12500.00 | 200.00 | 1201முதல் 2400 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 25000.00 | 540.00 |
| 2401முதல் 3600 சதுர அடி பரப்பளவிற்கு மேல் உள்ள கட்டிடம் | 15000.00 | 300.00 | 2401முதல் 3600 சதுர அடி பரப்பளவிற்கு மேல் உள்ள கட்டிடம் | 30000.00 | 660.00 |
| 3601 அடிக்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு ரூ.15000/-ம் ஒவ்வொரு 1000 சதுர அடிக்கும் கூடுதலாக | 2500.00 | 100.00 | 3601 அடிக்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு ரூ.30000/-ம் ஒவ்வொரு 1000 சதுர அடிக்கும் கூடுதலாக | 5000.00 | 150.00 |
| | | | **சிறப்பினம்** | **150000.00** | **1500.00** |

மாநகராட்சி பாதாளச் சாக்கடை இணைப்புக்கான வைப்புத்தொகை மற்றும் உபயோகிப்பாளர் கட்டணத்தினை அடிப்படை கட்டணத்தில் இருந்து முதல் 5-ஆண்டு செயலாக்கம் நிறைவு பெற்றவுடன் 10% கூடுதலாக நிர்ணயம் செய்யவும், அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு 5 ஆண்டுகள் நிறைவுக்கு பின்னர் ஏற்கனவே உள்ள கட்டண விகிதத்தில் குறைந்தது 10% கூடுதல் கட்டணம் நிர்ணயம் செய்யலாம்.

**<u>வணிக சிறப்பினங்கள் என்பன</u>** 1. திருமண மண்டபங்கள், 2. மருவத்துமனைகள் (படுக்கை வசதியுடன்), 3. கல்வி நிறுவனங்கள், 4. வணிக வளாகங்கள் (Shopping Complex), 5. தொழில் நிறுவனங்கள் (தொழிற்சாலைகள்), 6.தங்கும் வசதியுடன் கூடிய உணவகங்கள். 7. நட்த்திர உணவகங்கள், (Star Hotels) மற்றும் 8. நட்சத்திர உணவகத்திற்கு நிகரான பெரிய உணவங்கள் (Star Restaurants).

மேலும் மேற்படி நிர்ணயம் செய்த டெபாசிட் தொகையினை எற்கனவே வீட்டு இணைப்பு மற்றும் வணிக நிறுவனங்கள் இணைப்பு பெற்று பயனடைந்து வருவோர் மற்றும் புதியதாக பாதாள சாக்கடை குடியிருப்பு இணைப்பு மற்றும் வணிக நிறுவனங்களுக்கு வழங்குபவரிடம் கட்டிடம் சதுர அடி அளவில் (அ) பயன்பாட்டு முறையில் நீர்ணயிக்கப்பட்டுள்ள டெபாசிட் மற்றும் சேவைக்கட்டணங்கள் தொகையினை திட்டம் முடிவடைந்த பின் நடைமுறைக்கு கொண்டுவரவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

மேலும் மேற்படி திருத்திய துணை விதிகள் 38(உட்பிரிவு 8ல் ) அ1 மற்றும் 2-க்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து செயல்படுத்திட மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. வேலூர் மாநகராட்சியில் பாதாளச் சாக்டை திட்டம் பகுதி-I-ல் நிறைவேற்றப்பட்டுள்ளதை தற்போது பகுதி-II மற்றும் பகுதி-III-ல் மேற்கொள்ள, தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி (TNUIFSL) நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட நம்பகதன்மை அறிக்கையின் படி மாற்றியமைக்கப்பட்டுள்ள பாதாளச் சாக்கடை திட்ட வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர சேவைக் கட்டணம் ஆகியவற்றினை ஏற்று உபவிதிகளில் மாற்றம் செய்து பொது அங்கீகாரம் மற்றும் வழிமுறைகள் பின்பற்றி இறுதி ஒப்புதல் பெற்று செயல்பாட்டுக்கு கொண்டுவர மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம். இது குறித்து பொது மக்களின் ஆட்சேபனை & ஆலோசனை பெறலாம். ஆட்சேபனை & ஆலோசனை பெறப்படாவிடில் நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:1501/2009/இ1)**
**தீர்மானம் எண்: 792 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(4) வேலூர் மாநகராட்சி பகுதிகளில் வேலூர் பாராளுமன்ற தொகுதிக்கு 05.08.2019 அன்று பொது தேர்தல் நடைபெற உள்ளதால். தேர்தல் விழிப்புணர்வுக்காக பொதுமக்களின், பார்வைக்கு 8′ அடி விட்டமுள்ள பெரிய பலூன்களில் வாசகங்கள் பொறிக்கப்பட்டு உயரத்தில் மாநகராட்சி பகுதிகளில் மூன்று இடங்களில் பறக்கவிட தோராய செலவினம் ரூ.2,16,000/- ஆகும். மேற்கண்ட பணி தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 15-ன் கீழ் திரு.N. வினோத்குமார் சப்ளையர் ஒப்பந்ததாரர் அவர்கள் மூலம் செய்து முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கவதற்கும் மாமன்றம் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியினை 2019-20 வரவு செலவு திட்டத்தில் செய்யவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:4021/2009/இ1)**
**தீர்மானம் எண்: 793 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(5) வேலூர் மாநகராட்சியில் இயங்கிவரும் உள்ளாட்சி உடன்நிகழ் தணிக்கைப் பிரிவு, துணை இயக்குநர் அவர்கள்2017-18-ம் ஆண்டுக்கான தணிக்கை கட்டணம் ரூ.21,94,756/- செலுத்தக் கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி தணிக்கை கட்டணத்தை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்:4021/2009/இ1)**

**தீர்மானம் எண்: 794 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(6) வேலூர் மாநகராட்சியில், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கீழே பட்டியலில் கண்ட 2 பணிகளுக்கு ஆணையாளர், வேலூர் மாநகராட்சி / மேலாண்மை இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்: 18.06.2019ல் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு 05.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் கீழ் கண்ட 2 பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய ஒப்புநோக்குப்பட்டியல் மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்ததாரர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 7 |
| 1. | Selection of consultant for preparation of feasibility cum DPR and Bid Process Management for Smart Road (28 Nos Roads and 5.50 Km. Ward No:16 & 17) in Vellore Corporation | 9.73 | M/s.AMN Engineering Consultants Chennai<br><br>M/s.CMI Enterprizes, Chennai | - 0.10% (L1)<br><br>+5.00% (L2) | L1-ல் -0.10% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |
| 2. | Selection of consultant for preparation of feasibility cum DPR and Bid Process Management for Smart Road ((24 Nos Roads and 5.02 Km. Ward No:18) in Vellore Corporation | 8.85 | M/s.AMN Engineering Consultants Chennai<br><br>M/s.CMI Enterprizes, Chennai | - 0.10% (L1)<br><br>+5.00% (L2) | L1-ல் -0.10% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |

மேற்கண்ட பட்டியலில் கண்ட 2 பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பிட்டு தொகையை விட குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம், மேலும் பட்டியலில் கண்ட 2 பணிக்கு 05.07.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் செலவு செய்யலாம்.
3. வேலூர் மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட மேற்கண்ட 2-பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனம் அளித்துள்ள குறைந்த தொகைக்கான 1.L1(-0.10%) 2. L1(-0.10%) ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்று பணி உத்திரவு வழங்க ஆணையர் அவர்கள் முன்அனமதி வழங்கியதையும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 6209/2018/S1)**

**தீர்மானம் எண்: 795 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(7) வேலூர் மாநகராட்சி மண்டலம் 1-முதல் 4 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோகப் பணிகள் செய்யவும் வால்வுகள் மோட்டார்கள் இயக்கவும் (ம) பராமரிப்பு பணிக்கு. 10.07.2019ல் ஒப்பந்தப்புள்ளியாக கோரியதை தமிழ் நாளிதழ் தினக்குரல் என்ற நாளிதழில் மாநில அளவில் செய்திதாள் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. எனவே இதற்கான செய்தித்தாள் விளம்பர செலவு ரூ.24000/- தொகையை வழங்க மாமன்றத்தின் அனுமதிக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு: -</u>

3. இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
4. விளம்பர செலவினத் தொகை ரூ.24000/- 2019-20 பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3353/2019/இ1)

**தீர்மானம் எண்: 796 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(8) வேலூர் மாநகராட்சி மண்டலம் - III க்குட்பட்ட ST.Mary's Nursery and Primary School, Krishna Nagar Extension-1, பிஷப் டேவிட் நகர் என்ற விலாசத்திலுள்ள பள்ளி நிர்வாகத்தினர் வேலூர் மாநகராட்சி மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.30097/2019ல் சொத்துவரி சமந்தமாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மாநகராட்சி சார்பாக ஆஜராகும் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திருமதி.P.சாந்தி, அவர்களுக்கு வழக்கிற்கான கட்டணங்களை வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு : மாமன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண். 992/2019/எ1/ம-III**

**தீர்மானம் எண்: 797 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(9) வேலூர் மாநகராட்சி மண்டலம் - III –ல் இயங்கிவரும் TN23 CC2237 லாரியின் பழுதடைந்துள்ள பேட்டரிக்கு பதில் புதியதாக பேட்டிரி ஒன்று வாங்கிட தோராயச் செலவு ரூ.3700/-க்கு மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** : மாமன்றம் அனுமதிக்கலாம் அவசர அவசியத்தினை முன்னிட்டு மாமன்ற அனுமதி எதிர்பார்த்து நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம அனுமதிக்கலாம்.

**(ந.க.1255/2019/H1)**

**தீர்மானம் எண்: 798 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(10) வேலூர் மாநகராட்சி மண்டலம் - III –ல் இயங்கிவரும் TN23 CC2237 லாரியின் பழுதடைந்துள்ள பேட்டரிக்கு பதில் புதியதாக பேட்டிரி ஒன்று வாங்கிட உள்ளூரில் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

1. வேலூர் பேட்டரி சென்டர் (பழைய பேட்டரி நீங்கலாக) - ரூ.3360.00
2. தி ஆட்டோ டீசல் சர்வீஸ் (பழைய பேட்டரி நீங்கலாக) - ரூ.3550.00
3. வேலூர் பேட்டரி கேஸ் (பழைய பேட்டரி நீங்கலாக) - ரூ.3700.00

**<u>அலுவலக குறிப்பு</u>** : மேற்படி விலைப்புள்ளிகளில் வேலூர் பேட்டரி சென்டர் குறைவான விலைப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

**ந.க.1255/2019/H1**

**தீர்மானம் எண்: 799 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(11) வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20-ல் கீழ் ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு நாள்: 28.06.2019-ன் படி கீழே பட்டியலில் கண்ட 2 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு 26.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 7 |
| 1. | Construction and Alteration of Existing Toilet block for using Sanitary Supervisor Ward Office in Ward No.18, at Mandhaveli Area in Zone-II Vellore Corporation. | 4.50 | V.கல்பனா, வேலூர்<br>S.சாந்தி, வேலூர். | - 0.03% (L1)<br>+ 0.77% (L2) | L1-ல் -0.03% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |
| 2. | Providing New Pipe Line at Filter Bed Tank to Saidapet Hill area Ward No.30 in Zone-II Vellore Corporation. | 10.40 | S. சாந்தி, வேலூர்.<br>V.கல்பனா, வேலூர் | 0.00% (L1)<br>+0.38% (L2) | L1-ல் 0.00% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |

மேற்படி பட்டியலில் கண்ட 2 பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பிட்டு தொகையை விட குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொதுநிதி 2019-20ன் கீழ் செலவு செய்யலாம்.
3. வேலூர் மாநகராட்சியில் பொதுநிதி 2019-20ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட மேற்கண்ட 2 பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததார்களின் குறைந்த தொகைக்கான (L1-((1)-0.03%, (2)0.00%, ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 4920/2019/E1)**

**தீர்மானம் எண்: 800 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(12) வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20-ல் கீழ் ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு நாள்: 18.06.2019-ன் படி கீழே பட்டியலில் கண்ட 2 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு 08.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 7 |
| 1. | வேலூர் மாநகராட்சி மண்டலம்-2 மற்றும் 3 வார்டு எண்:16,25,28, 29,30,31,32,33,34,35,36,37 (ம) 37,38 ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை ஆள்நுழைவு வாயிலில் உள்ள அடைப்பு, பைப்லைன் உடைப்பு சரிசெய்யும் பணிக்கு. | 7.50 | D.பழனியப்பன், வேலூர்.<br><br>V.S..ஆனந்தன், வேலூர். | - 0.23% (L1)<br><br>+ 1.53% (L2) | L1-ல் -0.23% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |
| 2. | வேலூர் மாநகராட்சி மண்டலம்-2 மற்றும் 3 வார்டு எண்:16,25,28,29,30,31,32,33,34,35,36,37 (ம) 37,38 ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை ஆள்நுழைவு வாயிலில் உள்ள Ring and Cover Slab புதியதாக அமைக்க (ம) பராமரிப்பு பணிக்கு. | 5.00 | A.V. விநாயகமூர்த்தி, வேலூர்.<br><br>A.G.செல்வராஜ், வேலூர் | - 0.04% (L1)<br><br>+ 5.73% (L2) | L1-ல் -0.04% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |

மேற்படி பட்டியலில் கண்ட 2 பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பிட்டு தொகையை விட குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொதுநிதி 2019-20ன் கீழ் செலவு செய்யலாம்.
3. வேலூர் மாநகராட்சியில் பொதுநிதி 2019-20ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட மேற்கண்ட 2 பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததார்களின் குறைந்த தொகைக்கான (L1-((1)-0.23%, (2)-0.04%, ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 3243/2019/E1)**

**தீர்மானம் எண்: 801 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(13)** வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20-ன் கீழ் வேலூர் மாநகராட்சியில் அனைத்து வார்டுகளில் உள்ள குடிநீர் தேக்க தொட்டிகளில் பொது மக்களுக்கு விநியோகம் செய்யம் குடிநீரில் சேர்ப்பதற்கு தேவையான குளோரின் கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.2.00 லட்சம் ஆகும். தற்சமயம் மழைக்காலமாக உள்ளதால் முன்எச்சரிக்கை நடவடிக்கை மேற்க்கொள்ள இத்தொகைக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கும் உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதற்கும் மாமன்றத்தில் பதிவு செய்ய மாமன்ற பொருள் அனுமதிக்கு ஆணையரின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1) மாமன்றபொருள் பதிவு செய்யலாம்
2) மேற்படி பணிக்கு மாநகராட்சி ஆணையர் அவர்கள் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கு மாமன்றம் பதிவு செய்யலாம்.
3) இப்பணிக்கு செலவினத் தொகையை 2019-20ம் பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.3953/எச்1/2019)

**தீர்மானம் எண்: 802 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(14)** வேலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவு, திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் சுகாதார பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி கோர ரவி விளம்பர சேவை என்பவரிடம் தினசரி நாளிதழ்கள் ஆன தீ இந்து மற்றும் மாலை முரசு நாளிதழில்' விளம்பரம் செய்யப்பட்டது. அந்த விளம்பரம் செய்ய ஆகும் செலவு ரூ.62370/– (அறுபத்திரண்டாயிரத்தி முந்நூற்று எழுபது) தொகையை ரவி விளம்பர சேவை என்பவருக்கு அளிக்க மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

**ந.க.எண்:155/2018/H1**

**தீர்மானம் எண்: 803 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(15)** வேலூர் மாநகராட்சி பிறப்பு மற்றும் இறப்பு பிரிவில் திரு.கரிமுல்லா த/பெ சான்பாஷா, என்பவர் தன்னுடைய பிறப்பு சான்றில் உண்மை தன்மை சான்று வழங்க கோரியும், தனக்கு பாஸ்போர்ட் அலுவலகத்திலிருந்து எந்த தகவல் வரப்பெறாததாலும் வேலூர் மாநகராட்சி மீது சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு WP/16972/2019 மனுதாக்கல் செய்யப்பட்டு மனுதாரருக்கு தேவையான உண்மை தன்மை சான்று 01.02.2019–ம் தேதி அன்று பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டது. ஆனால் பாஸ்போர்ட் அலுவலகத்திலிருந்து எந்தவித பதிலும் வராததாலும், வேலூர் மீது 9வது பொறுப்பாக வழக்கு தொடரப்பட்டதாலும் அவ்வழக்கு எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு எண். WP/16972/2019 வழக்கு சம்மந்தமாக மேற்படி வழக்கை வாதாடிய திரு.P.சாந்தி Advocate, High Court of Madras, Standing Council for Corporation அவர்களுக்கு சேர வேண்டிய (வழக்கு கட்டணம்) ரூ.10,000/– (ரூபாய் பதாயிரம்) வழங்க மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்1468/2019/D1**

**தீர்மானம் எண்: 804 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(16)** வேலூர் மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட பழைய பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூல் உரிமம் குத்தகையை திரு. A. முனீர் அஹமத் அவர்கள் ஏலம் எடுத்து குத்தகையை நடத்தி வந்தார்.

மேற்படி குத்தகை உரிமம் 30.06.2019 வரை வழங்கப்பட்டு உள்ளது. திரு.A.முனீர் அஹமத் அவர்கள் பழைய பேருந்து நிலையத்தில் மிடுக்கு நகர திட்டத்தின்கீழ் கார் பார்கிங் கட்ட உள்ளதால் தனக்கு

பெருத்த நஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தினால் மேற்படி குத்தகையை ரத்து செய்து தருமாறு 12.06.2019ம் மனுவில் கோரியுள்ளார்.

எனவே திரு. A. முனீர் அஹமத் அவர்களுக்கு வழங்கப்பட்ட குத்தகை இனமான பழைய பேருந்து நுழைவு கட்டணம் வசூல் உரிமம் குத்தகையை ரத்து செய்தும் 1.07.2019 முதல் குத்தகை விதிகளின் படி ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோரவும் குத்தகையை யாரும் ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோராத பட்சத்தில் துறை முலம் வசூலிக்கவும் மாமன்றத்தின் முன் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு:

மேற்படி குத்தகையை ரத்து செய்தும் ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோரவும் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோராத பட்சத்தில் துறை முலம் வசூல் செய்ய மாமன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2545/19/அ1/ம.2

**தீர்மானம் எண்: 805 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(17)** வேலூர் மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட நேதாஜி மார்க்கெட் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் நேதாஜி மார்க்கெட் சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தில் இடித்துவிட்டு புதியதாக கட்டப்பட உள்ளதால் மார்க்கெட் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் 01.10.2018 முதல் ஏலம் விடப்பட்டது. Smart City திட்டத்தில் நேதாஜி மார்க்கெட் இடிக்கப்படுவது தொடர்ந்து கால தாமதம் ஏற்பட்டதால் மீண்டும் மூன்றுமாத காலம் (01.04.2019 முதல் 30.06.2019 (91 நாட்கள்) குத்தகை உரிமம் புதுப்பித்து நீட்டிப்பு செய்து திரு. G.மேகநாதன் எனபவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டடு வருகிறது. தற்போது குத்தகை உரிமம் 30.06.2019 உடன் முடிவடைவதால் Smart City திட்டத்தில் நேதாஜி மார்க்கெட் இடிக்கப்படுவது மேலும் கால தாமதம் ஏற்படுவதால் மேற்படி குத்தகையை ஏற்கனவே நடத்திவந்த திரு.G. மேகநாதன் என்பவருக்கு மேலும் **இரண்டு மாத காலத்திற்கு 62 நாட்களுக்கான** குத்தகை புதுப்பித்து தொகை ரூ.15,98,732/-ஐ (62 நாட்களுக்கு) குத்தகை தொகையாக பெற்றுகொண்டு **01.07.2019 முதல் 31.08.2019** வரையில் நீட்டிப்பு செய்து குத்தகை புதுப்பித்து உரிமம் வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் கோரப்படுகிறது.

அ.கு:

1) நேதாஜி மார்ககெட் சுங்கம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் ஏற்கனவே நடத்திவரும் குத்தகைதாரர் திரு. G.மேகநாதன் என்பவருக்கு மூன்று மாத காலம் 01.07.2019 முதல் 31.08.2019 வரையில் (62 நாட்களுக்கு) இரண்டு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து குத்தகை உரிமம் புதுப்பித்து வழங்க மாமன்றம் அனுமதிக்காலம்.

2) குத்தகைதாரர் மூன்று மாதத்திற்கு ஏற்கனவே செலுத்தி வந்த குத்தகை தொகை ரூ.15,98,732/- (62 நாட்களுக்கு) தொகையை முன்கூட்டியே செலுத்த அறிவுறுத்தி, அதனை செலுத்திய பிறகு குத்தகை உரிமம் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். முன் அனுமதி வழங்கி குத்தகை உரிமம் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**/326/2018/A1,Z-2

**தீர்மானம் எண்: 806 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(18)** வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20ன் கீழ் ஆணையர் அவர்களின் அனுமதி நாள்: 27.06.2019-ன் படி கீழே பட்டியலில் கண்ட 1 பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு 02.07.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு அளிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த விலை விகிதத்தில் விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்களின் விலைப்புள்ளியை முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலைவிகிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | வேலூர் மாநகராட்சியில் அனைத்து வார்டுகளில் உள்ள குடிநீர் தேக்க தொட்டிகளில் பொது மக்களுக்கு வினியோகம் செய்யம் குடிநீரில் சேர்ப்பதற்கு தேவையான குளோரின் (120 கிலோ) கொள்முதல் செய்யும் பணி. | 2.00 | VITA Enterprises Old No.2/89, first Floor Egmore, Chennai.<br><br>Ansi Tradelanes Private Limited, Old.No.8/2, New No.23, Canal Bank Road, Kasturba nagar, Adyar, Chennai-20<br><br>M/s KB Enterprises No 50/20, Mahabharath Street, V.Mandur, Villupuram | 1,50,000 /– L1<br><br>1,62,000/–L2<br><br>1,83,000/–3 | L1-ல் - 1,50,000 / – மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |

மேற்படி பட்டியலில் கண்ட பணிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதத்தில் விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, பட்டியலில் கண்ட 1 பணிக்கு பணி உத்தரவு வழங்கபட்டதற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொது நிதி 2019-20ன் கீழ் செலவு செய்யலாம்.
3. வேலூர் மாநகராட்சியில் பொது நிதி 2019-20ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்ட மேற்கண்ட 1 பணிக்கு விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனம் குறைந்த விலை விகித 1) (L1- **1,50,000 /– 2)** (L2- 1,62,000/- 3) L3 - **1,83,000/–** ஆகிய மூன்று விலைப்புள்ளியை ஏற்கலாம், ஆணையர் அவர்கள் முன்அனுமதி வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.3953/எச்1/2019</u>

**தீர்மானம் எண்: 807 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(19)** வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20ன் கீழ் ஆணையர் அவர்களின் அனுமதி நாள்: 27.05.2019 -ன் படி கீழே பட்டியலில் கண்ட 1 பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு 18.06.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | வேலூர் மாநகராட்சியில் செயல்படும் நுண் உரக்கிடங்குகளின் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள 4- மேற்பார்வையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துதல் பணி | 8.15 | M/S.INDIAN GREEN SERVICE (IGS)<br><br>M/S.GLOW CONSULTANTS AVADI CHENNAI | –0.18 % L1<br><br>+.036 %L2 | -0.18% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |

மேற்படி பட்டியலில் கண்ட பணிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பட்டியலில் கண்ட 1 பணிக்கு பணி உத்தரவு வழங்க மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொது நிதி 2019-20ன் கீழ் செலவு செய்யலாம்.
3. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட மேற்கண்ட 1 பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.INDIAN GREEN SERVICE (IGS) நிறுவனத்தின் குறைந்த தொகைக்கான (L1-((1)-0.18% ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, ஆணையர் அவர்கள் முன்அனுமதியில் பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:9312/2019/எச்1,)

**தீர்மானம் எண்: 808 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(20) வேலூர் மாநகராட்சிப்பகுதியில் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன **01.01.2019** முதல் தடை செய்யப்பட்டு அபராதத் தொகை விதிக்க **2019–**ஆம் வருடத்திய் தமிழ்நாடு சட்டம் **12**ன் கீழ் மற்றும் வேலூர் மாநகராட்சி சட்டம் **2008** பிரிவு **432–**ன் படி உபவிதிகள் ஏற்படுத்த மாமன்றத் தீர்மானம் எண்.**599** நாள்.**28.02.2019–**ல் ஒப்புதல் பெறப்பட்டு பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் அட்சேபனைகள் ஏதும் இருப்பின் அறிவிப்பு வெளியான **30** நாட்களுக்கள் மாநகராட்சி ஆணையருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கும்படி **11.06.2019** தேதிய தினத்தந்தி நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அறிவிப்பு வெளியான **11.06.2019** முதல் **30** நாட்கள் வரையில் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத காரணத்தினால் மேற்கண்ட உபவிதிகள் வேலூர் மாவட்ட அரசிதழில் வெளியிடவும், தொடர் நடவடிக்கை எடுக்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் வேலூர் மாநகராட்சிப் பகுதியில் தடைசெய்தல் மற்றும் அபராதத் தொகை நிர்ணயித்து நடைமுறைபடுத்தவும் உபவிதிகள் மாவட்ட அரசிதழில் வெளியிடவும் மாமனறம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண்:920/2019/H1**

**தீர்மானம் எண்: 809 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(21) வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20 கீழ் Providing Serial Light Sets for Main Office, Zonal Office-I, Zonal Office-II, Zonal Office-III and Zonal Office-IV and Providing Audio System, Balloon Arch, and Plantain Trees for Independence Day Celebration on 14.08.2019 and 15.08.2019 at Main Office Campus Vellore Corporation பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரு.1,60,000/-க்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்.28.06.2019-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 03.07.2019 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | M/s.Sudha Sound Service, வேலூர் | ரு.159890/- |
| 2 | M/s.Kalaidevi Sound Service, வேலூர் | ரு.168740/- |
| 3 | M/s.Ravi Audio Lights, வேலூர் | ரு.188800/- |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவானதாக M/s. Sudha Sound Service, வேலூர் நிறுவனம் மதிப்பீட்டுத் தொகை விலையில் அளித்துள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம், மேலும் M/s. Sudha Sound Service, வேலூர் நிறுவனத்தாருக்கு 13.08.2019 அன்று பணிஆணை வழங்கப்பட்டதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொது நிதி 2019-20 கீழ் செலவு செய்யலாம்.
3. பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவானதாக மதிப்பீட்டுத் தொகை விலையில் விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Sudha Sound Service, வேலூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம், ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:4010/2019/E1)

**தீர்மானம் எண்: 810 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(22)** வேலூர் மாநகராட்சி SuWaSeM - 2019 திட்டத்தின் கீழ் ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு நாள்: 27.06.2019-ன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் செயல்முறை Proc. No: F. SuWaSem /TWAD/RWS/Vellore/ Dt.02.07.2019-ன் படி கீழே பட்டியலில் கண்ட 4 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு 12.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | Construction of New Pond Rainwater Harvesting in Bhavani Nagar Ward No:6 in Zone – I, Vellore Corporation | 12.00 | M/s. Thanigai Construction, Vellore.<br>N.சீனிவாசன், வேலூர். | - 0.91% (L1)<br>+ 2.69% (L2) | L1-ல் -0.91% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |
| 2. | Construction of Check Dam at channel in V.O.C. Nagar, Ward No:24 in Zone – II Vellore Corporation. | 12.00 | N.சீனிவாசன், வேலூர்.<br>C.நடராஜன், வேலூர் | - 0.14% (L1)<br>+ 0.44% (L2) | L1-ல் -0.14% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |
| 3. | Construction of Check Dam at channel in Bharathiyar Nagar, Ward No:36 in Zone – III Vellore Corporation. | 9.00 | N.சீனிவாசன், வேலூர்.<br>C.நடராஜன், வேலூர் | - 0.09% (L1)<br>+ 0.35% (L2) | L1-ல் -0.09% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |
| 4. | Providing Check Dam with Bundcore wall and Deepaning of existing pond area at Edayanchathu Ramalinga Nagar, Zone-IV in Vellore Corporation. | 12.00 | N.சீனிவாசன், வேலூர்.<br>C.நடராஜன், வேலூர் | - 0.94% (L1)<br>+ 6.75% (L2) | L1-ல் -0.94% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |

மேற்கண்ட பட்டியலில் கண்ட 4 பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பிட்டு தொகையை விட குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம், மேலும் பட்டியலில் கண்ட 4 பணிக்கு 16.08.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை SuWaSeM - 2019 திட்டத்தின் கீழ் செலவு செய்யலாம்.
3. வேலூர் மாநகராட்சியில் SuWaSeM - 2019 திட்டத்தின் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட மேற்கண்ட 4 பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த தொகைக்கான(1.L1(-0.91%),2.L1(-0.14%),3.L1(-0.09%),4.L1(-0.94%)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், நான்கு பணிகளுக்கும் ஆணையர் அவர்களின் முன்அனுமதியில் பணி ஆணை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1816/2018/E1)**

**தீர்மானம் எண்: 811 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(23)** வேலூர் மாநகராட்சி குடிநீர் நிதி 2019-20 கீழ் Providing Distribution Pipeline at Ariyur Pudhu Street , Ariyur Thiruvalluvar Nagar, Sivanathapuram and Edayanchathu Arni Road in Zone-IV ,Vellore Corporation பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/-க்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்.20.06.2019-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 24.06.2019 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திருV.K.Magesh, Vellore | ரூ.132437/- |
| 2 | திரு.V.S. Anandan, Vellore | ரூ.139137/- |
| 3 | திரு. V.Sudhakar Vellore | ரூ.148500/- |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவானதாக திரு. V.K.Magesh Vellore ஒப்பந்ததாரர் மதிப்பீட்டுத் தொகை விலையில் அளித்துள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம், மேலும் திரு. V.K.Magesh, Vellore ஒப்பந்ததாரருக்கு 25.06.2019 அன்று பணிஆணை வழங்கப்பட்டதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை குடிநீர் நிதி 2019-20 கீழ் செலவு செய்யலாம்.
3. பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவானதாக மதிப்பீட்டுத் தொகை விலையில் விலைப்புள்ளி அளித்துள்ள திரு. V.K.Magesh, Vellore ஒப்பந்ததாரர் விலைப்புள்ளியை ஏற்கலாம், ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:3490/2019/E1)

**தீர்மானம் எண்: 812 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(24)** வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20 கீழ் Maintenance works for Amma Unavagam at Anna Salai near MLA Office and Kaspa Nedundh Street in Zone –IV, Vellore Corporation பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/-க்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்.20.06.2019-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 24.06.2019 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு. R.Arul, Vellore | ரூ.131923/- |
| 2 | திரு.V.S. Anandan, Vellore | ரூ.134520/- |
| 3 | திரு. V.Sudhakar Vellore | ரூ.149090/- |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவானதாக திரு. A.Arul Vellore ஒப்பந்ததாரர் மதிப்பீட்டுத் தொகை விலையில் அளித்துள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம், மேலும் திரு. A.Arul, Vellore ஒப்பந்ததாரருக்கு 25.06.2019 அன்று பணிஆணை வழங்கப்பட்டதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொது நிதி 2019-20 கீழ் செலவு செய்யலாம்.
3. பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவானதாக மதிப்பீட்டுத் தொகை விலையில் விலைப்புள்ளி அளித்துள்ள திரு. A.Arul, Vellore ஒப்பந்ததாரர் விலைப்புள்ளியை ஏற்கலாம், ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:3467/2019/E1)

**தீர்மானம் எண்: 813 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(25) வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20ன் கீழ் வேலூர் மாநகராட்சிக்கு சொந்தமான TATA ACE எண். TN 23 CC 1832 க்கு Purchasing of New Battery பணி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3400/-க்கு ஆணையர் அவர்கள் நாள்.15.03.2019-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 16.07.2019 அன்று பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | **M/s Vellore BatteryCentre,** நிறுவனம். வேலூர் | ரூ.3400.00 | மதிப்பீட்டுத் தொகை விகிதம் (0.00) (L1) |
| 2 | **M/s The Auto Diesel Service Carriage,** நிறுவனம், வேலூர் | ரூ.3500.00 | மதிப்பீட்டுத் தொகையைவிட 2.94% அதிகம் (L2) |
| 3 | **M/S Vellore Battery Care** நிறுவனம், வேலூர் | ரூ.3650.00 | மதிப்பீட்டுத் தொகையைவிட 7.35% அதிகம் (L3) |

M/s Vellore Battery Centre, நிறுவனம், வேலூர் (L1) ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு தொகை விகிதத்தில் அளித்துள்ள விலைப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு மாமன்றப் பொருள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொது நிதி 2019-20ல் செலவு செய்யலாம்
3. பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள M/s Vellore Battery Centre, வேலூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

ந.க.எண்.2883/2019/H1

**தீர்மானம் எண்: 814 – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(ஒம்) S.சிவசுப்பிரமணியன்**
**ஆணையாளர் (ம)தனி அலுவலர்,**
**வேலூர் மாநகராட்சி.**